மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.61/2020</u>

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ம் நாள் செவ்வாய்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காசிநாதன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>05.08.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தாவா சொத்துக்கள் 2014 பாகப்பிரிவினைப்படி எங்களுக்கு பாத்தியம் என்று நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நானும், என் சகோதரரும் என் தகப்பனாரும் அந்த பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான் அந்த பாகப்பிரிவினையில் என் தகப்பனாருக்கு சொத்துக்கள் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் சொத்துக்களின் பழைய க.ச.எண் குறிப்பிடப்பட்டு பாகப்பிரிவினை செய்து கொள்ளப்படவில்லை என்றால் சரிதான் நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்ட

சொத்துக்கள் என் தகப்பனாரின் தாத்தாவிற்கு சுயாஜிதமாக இதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

2. என் தகப்பனாரின் தாத்தா யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் கிருஷ்ணசாமி முதலியார் என்பவரிடமிருந்து என் தகப்பனாரின் தாத்தா கிரையம் பெற்றார்.அந்த கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களில் கட்டிடங்கள் உள்ளதாக கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் தகப்பனாரின் தாத்தா கிரயம் பெற்ற ஆண்டே அதில் கட்டிடங்கள் கட்டி விட்டார் கணபதி பண்டாரத்தின் பெயரிலான கிரைய ஆவணத்தின் சான்றிதழ் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. அந்த கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கணபதி பண்டாரம் கிரையம் பெற்றுள்ள கிரய ஆவணத்தில் கிரைய சொத்திற்கு செக்பந்தியாக கிருஷ்ணசாமி முதலியார் காலி நிவேஷனத்திற்கும் வடக்கு என சொத்து விவரம் கண்டுள்ளதா என்றால் ஆமாம். அதில் கண்டுள்ள கிருஷ்ணசாமி முதலியார் என்பவரிடமிருந்து தான் என் தாத்தா கிரயம் பெற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் கணபதி பண்டாரம் கிரையம் பெற்ற சொத்துக்களில் கட்டிடம் உள்ளதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. 1934 வருடத்தில் என் தகப்பனாரின் தாத்தா கிரயம் பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் 17 சென்ட் நிலத்தை மட்டும் தான் அவர் கிரயம் பெற்றார் என்றால் சரிதான்.

4. என் பாட்டனார் அந்த கிரயம் ஆவணத்தின் அடிப்படையில் எந்த ஏற்பாடும் செய்து வைக்காமல் தான் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

என் தகப்பனாரின் பாட்டனார் காலத்திற்கு பின்னிட்டு என் தகப்பனார் பெயரிலோ, என் தகப்பனாரின் தகப்பனார் பெயரிலோ எந்த பட்டா மாறுதலும் ஏற்படவில்லை என்றால் என் தகப்பனார் பெயரில் 1985 இல் பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது. அந்த பட்டாவை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்து என்றால் ஆமாம் நான் சொல்வது போல் என் தகப்பனார் பெயர்களான பட்டா எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்ததாக வழக்கிற்க்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

5. நானும் என் சகோதரரும் 2014 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டதற்கு பின்னிட்டு தான் எங்கள் பெயருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டுள்ளது என்றால் 1985 ல் என் தகப்பனார் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் எங்கள் பெயருக்கு பட்டா மாறுதல் செய்து கொண்டோம். என் தகப்பனார் பெயரில் எந்த பட்டா மாறுதலும் ஏற்படவில்லை என்றும், 1934 கிரையத்தின் அடிப்படையில் தான் நாங்கள் 2014 இல் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் பெயரில் எந்தவித ஆவணங்களும் இல்லாமல் 1934 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள விஸ்தீரணத்தை விட அதிக விஸ்தீரணம் கண்டு நாங்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

6. பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு அருகில் உள்ள சொத்துக்களின் உரிமையாளரான கணபதி பண்டாரத்தின் வாரிசுகள் என்று சொன்னால் கணபதி பண்டாரத்தின் வாரிசு லட்சுமியம்மாள் மட்டும் தான் பிரதிவாதிகள் யாரென்று தெரியாது. எங்கள் பாகப்பிரிவினை

ஆவணத்தில் கண்டுள்ள 2 வது அயிட்ட சொத்திற்கு செக்குபந்தியாக சச்சிதானந்தம் இடத்திற்கும் தெற்கு என கண்டுள்ளதா என்றால் ஆமாம். மேற்படி சச்சிதானந்தம் என்பவருடைய மக்கள் தான் பிரதிவாதிகள் என்றால் இருக்கலாம். மேற்படி சச்சிதானந்தம் என்பவர் கணபதி பண்டாரத்தின் மகன் என்றால் அது எனக்கு தெரியாது கணபதி பண்டாரத்தின் மகன் தான் சச்சிதானந்தம் மேற்படி சச்சிதானந்தம் என்பவரின் வாரிசுகள் தான் பிரதிவாதிகள் என்றும், மேற்படி விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றும் அதை தெரிந்து கொண்டே நான் மறுத்து சாட்சி அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

7. பிரதிவாதிகள் என்ன தொழில் செய்கிறார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. 3 ம் பிரதிவாதி வெள்ளகோவில் நாட்ராயன் கோவிலில் பூசாரி ஆக இருக்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது பிரதிவாதிகள் என் கடையை பூட்டியும் எங்கள் தாத்தா இடம் என்று சொல்லியும் என் கடையில் வாடகைக்கு இருப்பவர்களை காலி செய்யச் சொல்லியும் என் கடைக்கு வாடகை கேட்டும், அடிக்கடி தகராறு செய்வார்கள் அதனால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். எனது முதல் விசாரணை சாட்சியத்தில் தாவா சொத்தை பிரதிவாதிகள் குறைந்த விலைக்கு கேட்டு நான் கொடுக்க மறுத்த காரணத்தினால் எனக்கு இடையூறு செய்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

8. நான் சொல்வது பொய் என்றும் பிரதிவாதிகளுக்கு எவ்வித வருமானமும் கிடையாது என்றும் அவ்வாறு இருக்கும் போது

பிரதிவாதிகள் தாவா சொத்தை விலைக்கு கேட்டு பிரச்சினை செய்ததாக நான் வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எனது சொத்து பிரதிவாதிகளின் தாத்தா சொத்து என்று சொல்லி எதிர்வாதம் செய்துள்ளார்கள். பிரதிவாதிகளுக்கு தாத்தா வழியில் பாத்தியப்பட்ட சொத்தான எனது சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்வதால் தான் பிரதிவாதிகள் இந்த வழக்கில் எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

9. 1934 ஆம் ஆண்டு என் தாத்தா கிரயம் பெற்ற ஆவணத்தில் கண்டுள்ள விஸ்தீரனத்தை விட அதிக விஸ்தீரணம் கண்டு நாங்கள் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ளோம் என்றும் அந்த அதிகப்படியான விஸ்தீரனத்தை பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமியிலிருந்து ஆக்கிரமிப்பு செய்ய நாங்கள் முயற்சி செய்து வருகிறோம் என்றும் சொன்னால் சரியல்ல.

10. அந்த ஆக்கிரமிப்பை தடுப்பதற்காக தான் பிரதிவாதிகள் முயற்சி செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் எனது சொத்தை விலைக்கு கேட்டதாகவும் நான் கொடுக்க மறுத்ததால் எனக்கு இடையூறு செய்வதாகவும், நான் பொய்யான சங்கதிகளை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிகள் மீது பிரதிவாதிகளிடம் பிரச்சனை செய்வதாக காங்கேயம் காவல் நிலையத்தில் பலமுறை புகார் கொடுத்தும் அந்த புகாரில் உண்மை இல்லாத காரணத்தினால் தான்

இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

11. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள குடிநீர் கட்டண ரசீதுகள், மின்கட்டண ரசீதுகள் அனைத்தும் இந்த வழக்கத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், நான் பொய்யான சங்கதிகளை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடியாகதக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.08.05 18:34:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்